## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும்

செ.வெ.எண்: 725 **ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி** நாள்: 04.09.2008

**4.9.2008**

ஆசிரியராகப் பணி தொடங்கி, நம் இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவராக விளங்கி உலகப் புகழ் குவித்த தத்துவமேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த செப்டம்பர் 5 ஆம் நாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஆசிரியப் பெருமக்களின் நல்வாழ்வு கருதி உயர்கல்விக்கு ஊக்க ஊதியம்; 10 ஆண்டு பணி முடித்தால் தேர்வுநிலை ஊதியம்; 20 ஆண்டு பணி முடித்தால் சிறப்பு நிலை ஊதியம்; தமிழாசிரியர்களிடைய இருநிலை நீக்கம்; தமிழாசிரியர்களின் 'புலவர்' பட்டம், 'பி.லிட்' பட்டமாக மாற்றம்; தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட நல்லாசிரியர் விருதுகளை, உயர்நிலைப்பள்ளி, ஆங்கிலோ இந்தியன் பள்ளி உள்ளிட்ட பிற பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் வழங்கிட ஆணைகள்; நல்லாசிரியர் விருது– 'டாக்டர் இராதாகிருட்டிஷ்ன் விருது' எனப் பெயர் மாற்றம்; விருதுத் தொகை 1000 ரூபாயை, 1997இல் 2000 ரூபாய் என்றும், 2006இல் 5000 ரூபாய் என்றும் உயர்த்தியமை; மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகரான ஊதிய உயர்வுகள், அகவிலைப் படிகள் உட்பட அரசு ஊழியர்களுக்கான சலுகைகள் அனைத்தையும் ஆசிரியர் சமுதாயமும் பெற்றுப் பயனடையச் செய்கின்றமை, பதிவு மூப்பு அடிப்படையிலேயே பள்ளி ஆசிரியர்கள் நியமனம், தொகுப்பூதிய ஆசிரியர் நியமன முறை அடியோடு ரத்து எனச் சலுகைகளை வழங்கி அவர்களைக் காத்து வருகின்றமை முதலான இந்த அரசு வழங்கும் ஆசிரியர் நலத்திட்டங்களை நினைவு கூர்ந்து, ஆசிரியர் சமுதாயம் தமது மக்கள் மனை, சுற்றம் சூழ, நலனும் வளனும் வாய்ந்து, மகிழ்வுடனும் மன நிறைவுடனும் பல்லாண்டு புகழுடன் வாழ என் இதயங்கனிந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துகளையும், இன்று மத்திய மாநில அரசுகளின் விருதுகள் பெறும் ஆசிரியப் பெருமக்களுக்கு என் பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9.